## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலகக, இலங்கை சக்தி முகாமையாளர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1994, சனவரி மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது**

---

*1994 சனவரி மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்* **வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 | தபாற் செலவு : ரூபா 1.00

## 1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை சக்தி முகாமையாளர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்.

[1994, சனவரி மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 102/90

### இலங்கை சக்தி முகாமையாளர் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

முன்னுரை.

''இலங்கை சக்தி முகாமையாளர் கழகம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைச் சக்தி முகாமையாளர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை சக்தி முகாமையாளர் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை சக்தி முகாமையாளர் கழகத்தில் தற்போது உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை சக்தி முகாமையாளர் கழகம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்டதொரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடன், பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக விருத்தல் வேண்டும்:—

(அ) சக்தி முகாமை வழக்காறுகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதிலும், பரப்புவதிலும், பரிமாறிக்கொள்வதிலும் உதவி செய்தல்;

(ஆ) இலங்கையில் சக்தி முகாமை வழக்காறுகளுக்கும் செயற்பாடுகளுக்கும் ஊக்கமளித்தலும் அவற்றை மேம்படுத்தலும்;

(இ) உறுப்பினர்களுக்கு சக்தி முகாமைக்கான அரசாங்க உதவி, தனியார் உதவி பயனுறும் வகையில் கிடைப்பதற்குரிய ஒரு வழிவகையாகச் சேவையாற்றுதல்;

(ஈ) பயனுறு சக்தி முகாமைபற்றி போதிய, நாளது வரையான தகவலை உறுப்பினர்களுக்கு அளித்தல்;

(உ) சக்தி முகாமை பற்றிய கலந்தாலோசனைச் சேவைகளுக்கு ஊக்கமளித்தல்; அத்துடன்

(ஊ) மேற்கூறிய குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்குகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணத்தைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், அரசிடமிருந்து அல்லது வேறெவையேனும் குழுக்கள் அல்லது ஒழுங்கமைப்புக்களிடமிருந்து அளிப்புக்களையும் வேறு உதவியையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடு செய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலைக்கமர்த்தல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவர்களான பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த பணிப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் கழகத்தின் பணிப்பாளர் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும், அத்துடன் சமுகமளித்து வாக்களிக்க உரித்துடைய உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது ஏதேனும் கருமத்திற்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத அத்தகைய விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) ஒவ்வொரு வகுப்பினதான உறுப்பாண்மைக்குச் சேர்வதற்குத் தேவையான உறுப்பாண்மைத் தகைமைகள், அநுபவம் என்பவற்றினை வகுப்பாக்கஞ் செய்தலும் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், இடைநிறுத்துதல் அல்லது வெளியேற்றுகை என்பனவும்;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தலும், பதவிதாங்குநர்களின் பதவியை வறிதாக்குதலும், அவர்களின் தத்துவங்கள், ஒழுக்கம் அத்துடன் கடமைகள் என்பன;

(இ) பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் நியமனமும், அத்துடன் அவர்களின் தத்துவங்கள், ஒழுக்கம் அத்துடன் கடமைகள் என்பனவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரின் தத்துவங்கள் ஒழுக்கம், கடமைகள், பணிகள் என்பன;

(உ) பணிப்பாளர் சபையின் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை, அதனைக் கூட்டுதல், நடாத்துதல் அத்தகைய கூட்டங்களுக்கான நேரங்கள், இடங்கள், அவைபற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்ட நடப்பெண், அத்துடன் அங்கு அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும், அதன் நிதியங்களின் கட்டுக்காவல், அத்துடன் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அத்துடன் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் எந்த விதியும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒருவிதி என்றாற் போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும், அதேவிதத்திலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அவற்றிற்குச் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராகவிருத்தல் வேண்டும்.

7. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகை கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத்தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

கட்டணங்களையும், ஒப்பப் பணங்களையும் அறவிடுவதற்குள்ள தத்துவம்.

8. கூட்டுத்தாபனமானது —

(அ) அதன் ஏதேனும் வகுப்பினதான உறுப்பாண்மைக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான கட்டணங்களையும் ; அத்துடன்

(ஆ) கூட்டுத்தாபன உறுப்பினர்களிடமிருந்து அது நியாயமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய ஒப்பப் பணங்களையும் கட்டணங்களையும் ;

அறவிடுவதற்கு சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டும்.

கழகத்தினால் செலுத்தப் படற் பாலனவும் கழகத்திற்குச் செலுத் தப்படற் பாலனவுமான கடன்கள்.

9. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான கழகத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்த நாளன்று கழகத்திற்கு வருமதியான எல்லாக் கடன்களும் கழகத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும், கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படல் வேண்டும் என்பது.

10. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர் முன்னிலையிலன்றி அல்லது தலைவர் இல்லாவிடில் துணைத்தலைவர் ஒருவர் முன்னிலையிலுமன்றி எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அவர் தாம் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயரை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்துடன் அத்தகைய கையொப்பமிடுகையானது, சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாகலோ பாதிப்பதாகலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

12. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 365, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.